# பரலோக பொக்கிஷங்கள்



*உங்கள் பொக்கிஷம் எங்கே?... அங்கே உங்கள் இருதயம்!*

## துதியுடன் ‘அவர் வாசல்’ பிரவேசியுங்கள்!

நம் வாழ்வின் சுமை எதுவாயிருந்தாலும் “நானே வாசல்” என இந்த புதிய ஆண்டும் நம் முன் நிற்கும் ஆண்டவரை ஸ்தோத்தரிப்போமாக! இயேசு, நம் இரட்சகர் மாத்திரமல்ல, நம்மை நடத்தும் ஆண்டவராய் - கர்த்தராய் 'THE LORD' இருப்பது நாம் பெற்ற பாக்கியம்!

இந்த ஆண்டு முழுவதும், நம்மை அவரின் சொந்த ஆடுகளைப் போல், நம் கர்த்தர் (LORD) நல்ல மேய்ப்பனாய் முன்நின்று நடத்துவார்! ஆகவே, நாம் யாதொன்றிலும் தாழ்ச்சியடைவதில்லை! (சங்.23:1). உண்மைதான், நாம் அவரது சொந்த ஜனம்! அவரது மேய்ச்சலின் ஆடுகள்! ஆகவே, அவர் நடத்தும் எவ்வித வாசல்களிலும், துதியோடும் புகழ்ச்சியோடும், நமது “கர்த்தரின் LORD நாமத்தை” ஸ்தோத்தரித்து அவரைப் பின்செல்வோமாக! ஏனென்றால், நம் கர்த்தர் நல்லவர்! அவர் கிருபை என்றென்றைக்கும் உள்ளது! வருஷந்தோறும் அவரது உண்மை மாறுவதேயில்லை! (சங்.100:3-5). அல்லேலூயா!

*-tr*

பெட்டகம் 39 ஜனவரி 2023 பரல்கள் 01



## ‘அதிர்ச்சியடையா’ கிறிஸ்தவன்!

தன் அனுதின ஜீவியத்தில், ‘‘தன்னுடைய கொஞ்சத்திலும் போதுமென்ற பொன்னான மனதுடையவனாய்’’ இயேசுவின் சீஷன் இருப்பான் (1தீமோ 6:6). இதுபோன்ற சீஷன், ‘‘சகலமும்’’ தன் நன்மைக்கேதுவாகவே நடக்கிறது! என்ற சத்தியத்தை ஆழமாய் விசுவாசிப்பான். மகிழ்ச்சியோ அல்லது துன்பமோ; நோய்வாய்ப்பட்டிருப்பதோ அல்லது சுகித்திருப்பதோ; ஜீவனோ அல்லது மரணமோ.... ஆகிய எதுவாயிருந்தாலும் அவையாவற்றிற்கும் அவன் தன் இருதயத்தின் ஆழத்திலிருந்து நன்றி சொல்லிக் கொண்டிருப்பான். தன்னை சந்திக்கும் எல்லாப் பாரங்களையும் கவலைகளையும் இவன் மிகுந்த கவனமாய் தேவனிடம் வைத்துவிடுவதால் **‘அதிர்ச்சியால்’ ஸ்தம்பிக்கச் செய்யும் எந்தப் பயத்தையும், பதட்டத்தையும் இவன் ருசிப்பதேயில்லை!**

இந்த உத்தம சீஷன், தான் ஜெபிப்பதை நிறுத்தவேமாட்டான். இயற்கையான அவனது சொந்த சுபாவமாகவே ஜெபம் அவனுக்கு இருக்கும். ஆகையினால் அவன் எதற்குமே சோர்ந்து போவதில்லை. தாழ்மை உள்ளத்தோடு தேவனுடைய சமூகத்திற்குச் சென்று அடிக்கடி தன் முழங்காலில் நின்று ஜெபிப்பான்! கவலையின்றி வாழ்வான்!

*-Ed*

**2023 ‘பரலோக பொக்கிஷங்கள்’ சந்தா புதுப்பிக்கவும்**

வருட சந்தா ரூ.**170/-** தயவுசெய்து உடன் M.O செய்து அல்லது ஆன்லைன் மூலம் கீழ்கண்ட வங்கி கணக்கிற்கு **ஜனவரி 10-ம் தேதிக்குள்** அனுப்பி புதுப்பித்துக்கொள்ள அன்புடன் வேண்டுகிறோம். ஒரே விலாசத்தில் **3**பிரதிக்கு மேல் ஒரு பிரதி வீதம் ரூ.**140/-** அயல்நாடு ஒரு பிரதி ரூ.**950/-** அனுப்ப வேண்டும். புதுப்பித்துக் கொள்பவர்கள், தங்கள் சந்தா எண்ணை குறிப்பிடவும், புதிதாய் வாங்குபவர்கள்**‘புதிது’** என்று குறிப்பிடவும். நன்றி!

**ஆவிக்குரிய விழிப்பூட்டும்! அனல் குன்றா வழிகாட்டும்! அசல் உயர்த்தி போலி அகற்றும்!**
**சமரசம் மறுத்து சத்தியம் பேசும்! குருவின் அடிச்சுவடில் சீஷர்களை எழுப்பும்!**

வங்கி கணக்கு: MADURAI CHRISTIAN FELLOWSHIP, Indian Bank - Koodal Nagar Branch
A/c No: **502087685** IFSC Code: IDIB000K150
(பின்பக்கம் உள்ள **QR** கோடு மூலமும் அனுப்பலாம்)
(வங்கியில் செலுத்தியபின், உங்கள் விலாசம் மற்றும் தகவல் தெரிவிக்கவும்)

கடித தொடர்பு : பரலோக பொக்கிஷங்கள் 207A- Jaheer Husain Street, Koodal Nagar, (Thathaneri P.O.) Madurai - 625018,S.India Cell : 9843049935 Ph (O) 0452 - 3585200
Email: rathnakumar.t@gmail.com தமிழ் வலைதளம்: paralogapokkishangal.com
You Tube : paralogapokkishangal

## வருஷத்தின் துவக்க முதல்.... முடிவு மட்டும்!

*கார்மேகங்களை 'முடிவில்' மழையாய் பொழியச் செய்யும் ஆண்டவர்*

*ஓர் புத்தம் புதிய ஆண்டு! "நீங்கள் சுதந்தரிக்கப்போகிற தேசம் அல்லது 'இந்த புதிய ஆண்டு' மலைகளும் பள்ளத்தாக்குகளும் உள்ள தேசம். அது உன் தேவனாகிய* **கர்த்தர் விசாரிக்கும் தேசம்!** *வருஷத்தின் துவக்க முதல் வருஷத்தின் முடிவுமட்டும், எப்பொழுதும் உன் தேவனாகிய கர்த்தரின் கண்கள் அதின்மேல் வைக்கப்பட்டிருக்கும்" என்ற வாக்கே, நம் யாவருக்கும் அருளப்பட்டிருக்கிறது (உபாகமம் 11:11,12).*

*வருடத்தின் இந்த புதிய நாளில் "பாதை எங்கு போகிறது என புரியாத" குறுக்குச் சாலையின் மத்தியில் நிற்கிறோம். ஆகிலும், இந்த புதிய வருடம் முழுவதிலும் ஆசீர்வாதத்தை சுதந்தரிப்போம் என்பதே, தேவன் நம் யாவருக்கும் தந்த உற்சாகமாயிருக்கிறது. இந்த ஆண்டில் நடைபெறப் போகும் புதிய அனுபவங்கள் என்ன? என்னென்ன மாற்றங்கள் விளையும்? நம்மை சவாலிடும் தேவைகள் என்னவாயிருக்கும்? என்பதை யார் நமக்கு விசாரித்து தெரிவிக்கக்கூடும்? மனக்கிலேசம் வேண்டாம்! "அதை உன் தேவனாகிய கர்த்தர் விசாரிப்பார்!" மேலும் "உன் தேவனாகிய கர்த்தரின் கண்கள் ஆண்டுமுழுவதும் உங்களை கண்காணித்துப் பார்ப்பார்" என, நம்முடைய பரமபிதா மிகுந்த மகிழ்ச்சியும் நம்பிக்கையுமான வாக்குதத்தம் அருளியிருப்பதைக் கண்டீர்களா? (வச.12).*

*நம்முடைய அனைத்து தேவைகளுக்கும் கர்த்தரிடமிருந்தே நன்மை புறப்பட்டு வர ஆயத்தமாயிருக்கிறது. அவரிடமிருந்து புறப்பட்டு வரும் நீரோடைகள் ஒருபோதும் பாதியில் நின்றுவிடாது!*

**நெஞ்சமே, நீ ஏன் பதற வேண்டும்? உன் பரம பிதா தந்துள்ள கிருபையான உறுதிமொழிகளை கேட்கிறாய் அல்லவோ? சகல இரக்கங்களின் ஊற்றுக்கண் அவராயிருக்கிறபடியால், அது ஒருபோதும் வற்றாது! கர்த்தருடைய நதியை வற்றச் செய்வதற்கு, யாதொரு சக்திக்கும் அனுமதியில்லை!**

*சங்கீதக்காரன் கூறுவதைப்போல் "கர்த்தரிடமிருந்து*

*புறப்பட்டு வரும் நதி, கர்த்தருடைய தேசத்தை இடைவிடாமல் செழிக்கச் செய்யும்!"*.

*"நமக்கு அருளப்பட்ட வருடம் அல்லது தேசம் மலைகளும், பள்ளத்தாக்குகளும் உள்ள வருடம்!" (வச.11). பார்த்தீர்களா, இந்த வருடம் நிரந்தர சமபூமியாய் இராது! அல்லது ஆழத்தில் தடுமாறச் செய்யும் பள்ளத்தாக்காகவும் இராது! நமது வாழ்க்கை ஒரே சம பூமியாய் இருந்தால் 'சலிப்பு மந்தாரம்' நம்மை ஆட்கொண்டு விடும். குன்றுகளும் பள்ளத்தாக்குகளும் சேர்ந்து இருப்பது, ஓர் பரவசம் நிறைந்த வருஷமாகும். 11-ம் வசனம் கூறுகிறபடி "வானத்தின் மழைத் தண்ணீரை, குன்றுகள் குடித்து தேக்கி வைத்திருக்கிறது" அதிலிருந்து புறப்படும் தண்ணீரின் வெள்ளம் நூற்றுக்கணக்கான பள்ளத்தாக்குகளை பசுமையாக்கி பாய்கிறது! இந்த ஆசீர்வாதமே நமக்கு வாக்கு அளிக்கப்பட்ட வருஷமாயிருக்கிறது. மலைபோல தோன்றும் வாழ்க்கையின் துயரங்களே, கர்த்தருடைய கிருபாசனதண்டைக்கு விரைந்து செல்ல நம்மைத் தூண்டுகிறது! துயரத்தின் மத்தியில், தெய்வ கிருபை ஆசீர்வாதமான மழையை பொழியும்படிச் செய்கிறது!*

**மலையை சூழ்ந்து கொள்ளும் இருண்ட கார்மேகத்தைக் குறித்து, தடுமாறி நின்ற வேளையில், அந்த கார்மேகங்கள் 'வெள்ளி நிற மழையை' நமக்கு கொண்டு வந்து கொட்டுவதைக் கண்டு, மகிழ்கிறோம்.**

*குன்றுகளோ மலைகளோ ஏதும் இல்லாத சம பூமியைப் பாருங்கள்! அந்த வனாந்திர பூமியில் அநேகர் அழிந்து மாண்டார்கள்! பொன் நிற மணலில் புதையுண்டார்கள்! இவர்கள், குன்றுகளும் மலைகளும் நிறைந்த தேசத்தில் வாழ்ந்திருந்தால், இன்று செழித்திருப்பார்களே! தங்கள் மனதிற்கேற்ற சமபூமியில் வாழ்ந்திட எண்ணிய அவர்களின் வருடத்தில், புயல் வீசி, கனி மரங்களைச் சாய்த்து, அவர்களைப் பாலைவனமாக்கியதைக் கண்டு திகைத்து நிற்கிறார்களே! குன்றுகளும் மலைகளும் நிறைந்த தேசமோ கரடு முரடாயும், மேலே ஏறிச்செல்ல தடுமாற்றமாயும் இருக்கிறது. ஆனால் உண்மை என்னவென்றால், "தேவன் தந்த மலைதேசம்" அவரது ஜனத்தை எதிராளிகளின் தாக்குதல் நேரத்தில் நிறைவான பாதுகாப்பைத் தந்தருளி, அவரது ஜனத்தை ஆசீர்வதித்துள்ளது!*

*மலைதேசத்து துன்பங்கள், எவ்வளவு நஷ்டமும்! எவ்வளவு வேதனைகளும்! துன்பங்களும் தந்தது என நாம் அனுபவித்தாலும், பரத்திலிருந்து வரும் குரலோ* **"கர்த்தரை மாத்திரம் நம்பியிருங்கள்"** *என்பதேயாகும்!*

*இந்த வருடத்தின் முதலாம் நாளில், உங்கள் கரத்தை நம் பிதா*

*பற்றிக்கொண்டு, நடத்திச் செல்ல இடம் கொடுங்கள். இந்த முதலாம் 'ஒரு நாளைக்கு' மகிழ்ச்சியுடன் உங்களை பரம தகப்பனிடம் ஒப்புக் கொடுத்து விடுங்கள். அப்படிச் செய்து விட்டால், இந்த புது வருடம் முழுவதும் உங்களுக்கு மிக நல்லதும் ஆசீர்வாதமான வருடமாய் மாறிவிடும்!*

**நாம் அறியாத பாதை நடத்தினார்!**
**ஆகிலும் அந்தப் பாதை 'மேல் நோக்கிச்' சென்றது!**
**அந்த பாதையில் கலக்கம் தடுமாற்றங்கள் ஏற்பட்டது,**
**புயல் வீசி இருள் மூடியது....**
**நேரம் கழித்து மேகம் அகன்றது!**
**நடத்திச் சென்றவர் கர்த்தர் என அறிந்தேன்.**

**'அமைதியில்லா சூழ்நிலை' தேசத்தில் ஏற்பட்டாலும்,**
**எதிர்கால மனகோட்டை தகர்ந்தது போல் தோன்றினாலும்,**
**துயரத்திலும் குழப்பத்திலும் அவரே நடத்திச் சென்றார்!**
**அவர் சித்தம் நிறைவேறிடச் செய்தார்!**
**அவர் இன்னமும் என்னை தொடர்ந்து நடத்துகிறார்!**

*- Mrs.சார்லஸ் கஃவ்மென்*

---

## சிலுவையின் புனிதம் அறிந்திருக்க வேண்டும்!

*'தன் சிலுவை' எடுப்பதே நற்செய்தி*

*அன்று ரோம போர்ச்சேவகர்கள் கிறிஸ்துவை சிலுவையில் அறைந்த அதே வழி தடத்தை நாம் பின்பற்ற முடியாது! நம் ஆண்டவராகிய இயேசுவும், தன்னைப் போன்ற சிலுவையை நமக்கு அறிமுகம் செய்யவில்லை. அவ்வாறாக நாம் எண்ணிக்கொண்டால், அது "நற்செய்தியாக" அல்லது சுவிசேஷமாக அனுபவிக்க இயலாது! எந்த பரிசுத்தவானும் இதை விளங்கியிருப்பார்கள். இந்த வெளிச்சத்தில் காண்பதே "கிறிஸ்துவினுடையவர்கள், தங்கள் மாம்சத்தை.... சிலுவையில் அறிந்திருக்கிறார்கள்" என்ற வசனமாகும் (கலா.5:24).*

*பரிசுத்த வாஞ்சை கொண்ட ஆர்வமிக்க ஓர் கிறிஸ்தவ பெண்மணி தன்னுடைய ஆவிக்குரிய ஜீவியத்திற்கு ஆலோசனை கேட்டு 'ஹென்றி சூசோ' பரிசுத்தவானிடம் வந்தார்கள். அவர்கள் ஹென்றி சூசோவிடம் "என்மீது ஆழமான சுய வெறுப்பை ஏற்று நடக்க முயற்சிக்கிறேன். அந்த முயற்சி,* **கிறிஸ்து சிலுவையில் அனுபவித்த துன்பங்களுக்கு ஒப்பாக இருக்க வேண்டும்** *என்றே முயற்சிக்கிறேன். ஆனால், என்னுடைய ஆவிக்குரிய வளர்ச்சியில் கிறிஸ்துவுக்குரிய மாற்றம் ஏதும் சம்பவிக்கவில்லை" என தன் நிலையை எடுத்துக் கூறினார்கள். சிலுவையை குறித்த அவர்களின்*

அறியாமையை ஹென்றி சூசோ உடனே விளங்கிக்கொண்டார். அந்தப் பெண்ணைப் பார்த்து "ஒருவன் என் பின்னே வர விரும்பினால் அவன் தன்னைத்தான் வெறுத்து, **தன் சிலுவையை** அனுதினமும் எடுத்துக்கொண்டு என்னைப் பின்பற்றக்கடவன்" என்றுதானே ஆண்டவர் கூறினார் (லூக்கா 9:23). அப்படியிருக்க, ஆண்டவர் இயேசு "**என் சிலுவையை** எடுத்து பின்பற்றுங்கள்" என கூறவில்லையே. அதற்கு மாறாக "அவன் தன்னை தான் வெறுத்து! தன் சிலுவையை எடுத்து! என்னைப் பின்பற்றக்கடவன்" என்று மாத்திரமே கூறினார். '**என் சிலுவை**' என்பதற்கும், '**தன் சிலுவை**' என்பதற்கும், எவ்வளவு முக்கியமான வித்தியாசம் இருக்கிறது என்பதை கண்டீர்களா? என்று ஹென்றி சூசோ கேட்டார். மேலும், மொத்தத்தில் கண்ணோக்கும்போது, சிலுவை ஒரே மாதிரியாகவே தோன்றும்! ஆனால் 'இரண்டு சிலுவைகூட' ஒருமித்து ஒரேவிதமாய் இருப்பதில்லை என்பதை அறிந்துகொள்ளுங்கள்!

நமது ஆண்டவர் சகித்த சிலுவை என்ன? என்பது உங்களுக்கு நன்றாகவே தெரியும். இந்த உலகத்தில் வாழ்ந்த ஒருவர்கூட "அவருக்கு ஒப்பான சிலுவையின் அனுபவத்தை அடைந்திடவில்லை" என நான் கூறியதும், அந்த சகோதரியின் முகத்திலிருந்த கவலை மறைந்தது.

மேலும் நான் தொடர்ந்து கூறுகையில் "கிறிஸ்து பாடுபட்டு மரித்த சிலுவை, அவர் மனுக்குலத்திற்காக அனுபவித்த விசேஷித்த அனுபவமாகும்".

அவருடைய சிலுவை, 'இந்த உலகத்திற்கே ஜீவன் தரும்படி' அனுபவித்த சிலுவையாகும்:

1. அந்த சிலுவையில் பாவத்தை சுமந்தார்.
2. அந்த சிலுவையில் இருளை அகற்றினார்.
3. தான் பரிசுத்த பலியாவதற்கு பிதாவினால் புறக்கணிக்கப்பட்டார்.
4. சொல்லொண்ணா வேதனைகளை நமக்காக அனுபவித்தார்!

அப்படியிருக்க, கிறிஸ்துவின் சிலுவை அனுபவத்தை நானும் அடைய முடியும் என ஒருவன் எண்ணுவது "புனிதம் புரியாத தியாகமாகும்" என நான் விளக்கியவுடன், பரிசுத்தம் நாடி வந்த அந்த பெண்ணின் முகத்தில் அதிக பிரகாசம் தோன்றி, மகிழ்ச்சியுடன் திரும்பினார்!

நாம் நாள்தோறும் எடுக்கும் சிலுவை, மரணத்தின் ஆயுதமேயாகும்! நற்செய்தி என்னவென்றால், "பிறர் சுமந்து வரும் சிலுவையில், நீங்கள் மரித்திட அழைக்கப்படவில்லை" என்ற விடுதலையான சுயாதீனமேயாகும். "அவனவன்.... தன் சிலுவையை எடுத்து, அவரைப் பின்பற்றக்கடவன் என்ற அழைப்பை உங்களின் சொந்த நற்செய்தியாய் மனதார பற்றிக்கொண்டு வாழுங்கள்!

*- A.W.டோசர்*

## இயேசுவையே நோக்கிப் பார்த்து ஓடுங்கள்!

*விசுவாச ஓட்டத்தின் முடிவு, மகிழ்ச்சியும் வெற்றியுமே*

எபிரெயர் *12:1,2-ம் வசனங்களை கவனித்து வாசியுங்கள்: "விசுவாசத்தை துவக்குகிறவரும் முடிக்கிறவருமாயிருக்கிற இயேசுவை நோக்கி, பொறுமையோடே ஓடக்கடவோம்.* **அவர் தமக்கு முன் வைத்திருந்த சந்தோஷத்தின் பொருட்டு** *அவமானத்தை எண்ணாமல், சிலுவை சகித்து, தேவனுடைய சிங்காசனத்தின் வலதுபாரிசத்தில் அமர்ந்தார்".*

**இந்த பூமியில் வாழ்ந்த யாரைக்காட்டிலும் இயேசு மாத்திரமே 'விசுவாச மாதிரிக்கு' மிகப்பெரிய உதாரணமாயிருக்கிறார். அதுஏனென்றால், அவரே யாரைக் காட்டிலும் 'முற்றிலும் இழந்து' வாழ்ந்து காட்டியவர்!**

*இதை பவுல் விவரித்துக் கூறியபோது "அவர் தேவனுடைய ரூபமாயிருந்து, தேவனுக்குச் சமமாயிருப்பதை கொள்ளையாடின பொருளாக எண்ணாமல்,* **தம்மைத் தாமே வெறுமையாக்கி,** *அடிமையின் ரூபமெடுத்து, மனுஷர் சாயலானார்! அவர் மனுஷரூபமாய் காணப்பட்டு, மரணபரியந்தம் அதாவது சிலுவையின் மரணபரியந்தம் கீழ்ப்படிந்தவராகி, தம்மைத் தாமே தாழ்த்தினார்" என்ற வசனங்கள் நம்மை உலுக்குவதைப்போலவே இருக்கிறது (பிலிப்பியர் 2:6-8). நமதாண்டவர், தனக்குரிய திவ்யமான உரிமைகள் அனைத்தையும் தள்ளி வைத்துவிட்டு, தேவன் மீது விசுவாசமாயிருந்தார். ஆகவேதான் "தேவரீர், உம்முடைய பரிசுத்தவானின் அழிவை காணவொட்டீர்" என சங்கீதக்காரன் உரைத்தார் (சங்கீதம் 16:10):*

1. *அவர், ஓர் மனிதனாக இவ்வுலகத்திற்கு வந்தார்*
2. *இந்த உலகத்தின் பாவத்தை சுமந்தார்.*
3. *'பிதா உயிர்த்தெழச் செய்வார்' என்ற விசுவாசத்தோடு மரித்தார்.*
4. *தன் பிதாவினால் உன்னதத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டார்!*

*இயேசு கொண்டிருந்த விசுவாச கிரியைக்கு இணையாக இவ்வுலகில் யாதொன்றும் இல்லை. நமதாண்டவர் இயேசு கிறிஸ்து, கற்பனையாலும் சிந்திக்க முடியாத துன்பங்களைச் சகித்தார். இத்தனை துன்பத்தின் நடுவில், தேவனை விசுவாசித்து மாபெரும் வெற்றி சிறந்தார்! ஆகவேதான், அவரையே நமக்கு முன்வைத்து நோக்குகிறோம்.*

*"இயேசுவை நோக்கிப்பார்த்து" என்ற பதத்தின் மூலவிளக்கம் "***எல்லாவற்றையும் விட்டு இயேசுவையே பார்ப்பது***" என்று பொருள்படுத்துகிறது. எந்தவொரு இலக்கை வெற்றிகரமாய் அடைவதற்கும்*

நம்முடைய நோக்கு சரியாக இருக்க வேண்டும். என் தந்தை ஓர் சிறந்த விளையாட்டு பயிற்சியாளர். 'பேஸ் பால்' பந்தை எவ்வாறு உருளை தடிகொண்டு அடித்து விளையாட வேண்டும் என கற்றுத்தந்தபோது "உன்னை நோக்கி வரும் 'பேஸ் பால்' பந்தை உற்று நோக்காவிட்டால், அந்த பந்தை நீ அடிக்க முடியாது" என கூறுவார். அதுபோலவே கூடை பந்து விளையாடும்போது "உன் கண்களை அந்த கூடை வளையத்தை நோக்கிப்பார்த்து கோல் போட வேண்டும்" என்றும் போதித்தார்!

**அதுபோலவே நம் கிறிஸ்தவ ஜீவியத்தில், உங்கள் முழு கவனமும் கிட்டத்தட்ட உங்களை மறந்த நிலையாய் இருக்க வேண்டும். உங்களை காணும் கண்களை மறந்தால் மாத்திரமே, கிறிஸ்துவை காணும் கண்கள் பிரகாசமாகும்! தன் சுயம் காண்பதில் அக்கறை கொண்டவன், பரத்தின் இலக்கை காண தகுதியற்றவன்!**

ஒரு காரை ஓட்டிச் செல்பவன் காலால் அழுத்தும் பெடல் விசையை பார்த்துக்கொண்டு ஓட்டினால், இலக்கை அடைய மாட்டான். அதுபோலவே ஒரு பந்தயத்தில் ஓடுபவன், ஓடும் தன் காலைப் பார்த்து ஓடக்கூடாது. அதுபோலவேதான் "இயேசுவை மாத்திரமே நோக்கிப் பார்க்க நாம் அழைக்கப்பட்டிருக்கிறோம். அவரே நமது பூரண மாதிரியாய் இருப்பதற்கு காரணம்: விசுவாசத்தை துவக்குகிறவரும் முடிக்கிறவரும் அவராகவே இருக்கிறார்".

**ஆகவே அருகில் ஓடுகிறவர்களைக் கூட அல்ல, இயேசுவை மாத்திரமே நாம் பார்த்தால் போதும். எபிரெயர் 11-ல் குறிப்பிடப்பட்ட விசுவாச மாதிரிகளை விட, இயேசுவே நம் விசுவாச தலைவராய் விளங்குகிறார்!**

நம் விசுவாச ஓட்டத்தில் காத்திருக்கும் முடிவான பலன் என்ன? சந்தோஷம்! ஜெயம்! அவ்வாறே இயேசுவும் "தமக்கு முன் வைத்திருந்த சந்தோஷத்தின் பொருட்டு சிலுவையை சகித்தார்" (எபி.12:2). உலக ஓட்டப்போட்டி களத்திலிருக்கும் வீரர்கள் சொல்லும் ஒரே வார்த்தை "பந்தையத்தில் ஜெயித்திடும் பரவசத்திற்கு இணையாக" யாதொன்றும் இல்லை என்றே கூறுவார்கள். வாங்கப்போகும் மெடலோ அல்லது கோப்பையோ அல்லது பணமோ அல்ல.... பந்தயத்தில் ஜெயிப்பது ஒன்றே, அவர்களின் வெற்றிக்கு ஆதாரமாயிருந்தது. இயேசுவின் சந்தோஷத்திற்கு ஆதாரமாயிருந்ததெல்லாம் "தேவனுடைய சிங்காசனத்தின் வலதுபாரிசத்தில் அமரும் வெற்றியே ஆதாரமாயிருந்தது".

நமது முடிவான **நிரந்தர சந்தோஷத்திற்கு** ஒரே காரணம், நாம் கிறிஸ்துவோடு பரலோகத்தில் வாசமாயிருப்போம் என்பது மாத்திரமேயாகும். ஆகிலும், **இந்த உலகத்தில் அனுபவிக்கக் கூடிய**

மிகப்பெரிய ஜெயத்தின் உணர்வு "சோதனைகளை வெற்றி பெற்றோம்" என்பதேயாகும். நாம் அறிந்திருக்கிறபடி நம்மைச் சுற்றிலும் ஏராளமான சோதனைகள் உள்ளன:

*அந்த சோதனைகள் யாவும் நம் இலக்கை அடைய தடை செய்யும் சோதனைகளாகவே இருக்கின்றன. மற்றவர்களிடமிருந்து உங்களை அணுகும் சோதனைகளைவிட, உங்களுக்குள் இருந்து ஏற்படும் சோதனையே கொடிதாய் இருக்கிறது: ஓர் கிறிஸ்தவனாய் வாழ்வது எளிதல்ல....என்னுடைய பணிதளத்தில் அவமானப்படுத்தப்படுகிறேன்! என் அலுவலகத்தில் எனக்கு வர வேண்டிய உயர்வு கிடைக்கவில்லை! என் தத்துவ ஆசிரியர் பாடம் எடுக்கையில், என் விசுவாசத்தை தாக்குகிறார்! என் வாழ்க்கை துணையாய் இருப்பவர், குடும்பத்தில் பல சிக்கல்கள் ஏற்படுத்துகிறார்! இக்கால சமுதாயத்தில் ஒரு கிறிஸ்தவனாய் வாழ்வது மிக மிக கடினம்! என்ன செய்வது, காலம் கடைசியாகி விட்டது!" என்றெல்லாம் நாம் ஜெயம் பெற தடைசெய்யும் சோதனை அம்புகள்!*

ஓடும் பாதையில் இருக்கும் அநேக விசுவாசிகள் "இந்த உலகத்தில் என்ன நடக்கிறது என்றே புரியவில்லை. நம் தேசத்தில் விரைந்து காரியம் சரிப்படவில்லையென்றால், நாம் தொலைந்தோம்" என்றெல்லாம் கூறுகிறார்கள். இதுபோன்ற அவிசுவாச புலம்பலின் மத்தியில், **ஓர் உத்தம கிறிஸ்தவன்** தோல்வி அடைந்திடக்கூடாது! மனதை இளக்கரிக்கப்பண்ணும் செய்தியை கேட்டு நாம் வாழாமல், தேவன் மீது வைத்திருக்கும் விசுவாசத்தில் பிழைத்து வாழக்கடவோம்! அதுவே, கிறிஸ்துவுக்குள் நமது ஜெயம்!

*- ஜான் மேக் ஆர்தர்*

---

## குற்றச்சாட்டுகள் மத்தியில், ஆத்துமாவில் அமைதி கண்டேன்!

*யுத்தமே சூழ்ந்தாலும், ஆத்துமா கலங்கிடக் கூடாது*

**நா**ன் 'ஜெக்ஸில்' மடத்து தலைவி பொறுப்பை ஏற்க மறுத்த தாலும், என் பென்சன் பணத்தை ஒப்படைக்க மறுத்ததாலும், கொடிய புயல் என்மீது வீசியது. இச்சமயத்தில் 'என் ஆத்துமாவின் நிலைமை' எப்படி இருக்கிறது என்பதை காணவே ஆர்வமாயிருந்தேன்.

**என் ஆத்துமாவோ பூரண ஒப்புக்கொடுத்தலிலிருந்து விலகாமல் அமைதியாயிருப்பதைக் கண்டு மகிழ்ச்சியடைந்தேன்!**

*என் பட்சமாய் நான் இந்நிலையிலிருந்தாலும், ஜெக்ஸ்மடத்து சிஸ்டர்ஸ் மற்றுமுள்ள அனைவரும், தந்தை லா-கோம்பே*

அவர்களைக் குறித்து ஏராளமான பொய் கதைகளை திரித்துக்கூற ஆரம்பித்துவிட்டார்கள். எவ்வளவு தீமைகளை அவர்மீது கொட்டினார்களோ, அந்த அளவிற்கு அவர்மீது நான் கொண்ட மதிப்பும் மரியாதையும் இன்னும் அதிகமானதேயல்லாமல் சற்றும் குறையவில்லை! அவர்மீது வெறுப்பை உண்டு பண்ண வேண்டுமென தீதான குற்றச்சாட்டுகளை என்னிடம் கூறிய சிலரிடம் "நான், தந்தை லா - கோம்பே அவர்களை மீண்டும் பார்ப்பேனோ அல்லது இல்லையோ எனக்குத் தெரியாது. ஆனால், **அவருடைய உத்தம நீதி விளங்க வேண்டும்!** என்பதே என்னுடைய வாஞ்சையாயிருக்கிறது" என பதில் கூறினேன். மேலும், தந்தை லா - கோம்பே அவர்கள், "ஜெக்ஸ் மடத்து தலைவி பொறுப்பை ஏற்றுக்கொள்ள வேண்டாம்" என ஒருநாளும் என்னிடம் கூறியதில்லை. அந்தப் பதவி எனக்குரிய பணி அல்ல என்பதை நானே கர்த்தரிடமிருந்து உத்தரவு பெற்றேன் எனவும் பதில் கூறினேன். மேலும் அவர்கள் என்னிடம் "பிஷப் எவ்வளவு கனம் பொருந்தியவர்! உன்னைவிட அவருக்குத்தான் எல்லா உண்மைகளும் தெரியும்!" என தொடர்ந்து இகழ்ச்சியாகவே கூறினார்கள்.

ஆகிலும், என்னுடைய உறுதியான பதிலைக் கேட்ட அவர்கள் "நீங்கள் வஞ்சிக்கப்பட்டு போனீர்கள்! உங்கள் நிலை வெகு கேடாய் முடியும்!" என கூறியதைக் கேட்டு மனம் வருந்தினேன்.

**தொடர்ந்து அவர்கள் என்மீது குற்றம் சாட்டும் விரோதம் எனக்கு யாதொரு கவலையும் ஏற்படுத்த முடியவில்லை!**

என் மனதில் எழுந்த வேதனைகளை நான் தேவனுக்குத் தெரிவித்துவிட்டபடியால், எனக்குத் தேவையான தெய்வ சமாதானத்தை என் உள்ளத்திற்குள் தேவன் கொடுத்து விட்டார். ஒருவருடைய ஆத்துமா இந்த நிலையை அடைந்துவிட்டால், அது தனக்கென வேறு ஒன்றும் எதிர்பார்க்காமல், தேவனுக்கானவைகளையே தேடும். "அப்படியானால், இந்த ஆத்துமாவின் கிரியைதான் என்ன?" என என்னிடம் கேள்வி கேட்டார்கள். தேவனுக்குள் அடைக்கலம் பெற்றுவிட்ட ஆத்துமாவை, தேவனே பொறுப்பெடுத்து நடத்துவார். **வெளிப்புறத்தில்** வெகு சாதாரணமாய் தோற்றம் அளித்தாலும், **உள்ளத்திற்குள்ளாக** தேவ சித்தத்திற்கே தன்னை முற்றிலும் ஒப்புக்கொடுத்திருப்பான்! எவ்வளவுதான் வெளிப்புற காரியங்கள் மோசமாய் தோன்றினாலும், அல்லது ஜனங்களால் தீமைக்கு உட்படுத்தப்பட்டாலும், **ஆத்துமாவின் அமைதி கூடுமேயல்லாமல்** குறைவதில்லை! சூழ்நிலைகள் சற்று மாறுவதுபோல் புது மகிழ்ச்சி உதித்தாலும், மீண்டும், மீண்டுமாய் அமைதியான ஆத்துமாவை

*மேகங்கள் மறைத்து இடறுகள் கொண்டுவர முயற்சிக்கிறது. தேவனோடு கொண்ட ஆதிநிலைக்கு ஆத்துமா அடைக்கலமானவுடன், யாதொரு சூழ்நிலையும் நம்மை தேவனைவிட்டு பிரித்திட முடியாது!*

*அதாவது, யாதொரு அசுத்தமும் உள்ளத்தை தீண்டாது:*

1. *தனக்கானதை தேடும் அசுத்தம் உள்ளத்தை தீண்டாது!*
2. *சோதிக்கப்படாத வார்த்தைகளின் அசுத்தம் உள்ளத்தை தீண்டாது!*
3. *மனுஷீக பிரதிபலிப்பின் அசுத்தம் உள்ளத்தை தீண்டாது!*
4. *மனுஷீக பொங்கும் உணர்ச்சிகள் உள்ளத்தை தீண்டாது!*

*தீட்டான இவைகள் யாவும், மூடுபனி போல் நம்மை ஆட்கொள்ள துடித்தாலும், அவைகளால் யாதொரு தீர்வும் ஏற்படாது! மாறாக, அவைகள் நமக்கு இன்னமும் அதிகமாய் தீங்கு விளைவித்து நம்மை தீட்டுப்படுத்தவே முயற்சிக்கும். மேலான தீர்வு என்னவென்றால்:* **நீதியின் சூரியனாகிய ஆண்டவர் எழுந்தருளி, இந்த பனிமூட்டங்களை அகலச் செய்வதுதான்!** *இவ்வாறு நமக்கு வேண்டிய உள்ளான தூய்மை தேவனிடமிருந்து மாத்திரமே புறப்பட்டு வரவேண்டும். அவர் அருளும் கிரியைகள் இயற்கையாகவே நிகழும்!*

> அப்போது நம்முடைய ஆத்துமா சங்கீதக்காரனோடு சேர்ந்து மகிழ்ந்து: "எனக்கு விரோதமாய் ஒரு பாளையம் இறங்கினாலும், அது என்னை அணுகாது! என்மீது ஒரு யுத்தம் எழும்பினாலும், அவரில் நான் நம்பிக்கையாயிருப்பேன்" என்ற உன்னத அறிக்கையேயாகும்! (சங்.27:3).

*இவ்வித நிலைக்கு அனுபவத்தை பெற்ற ஒருவனுடைய ஆத்துமா 'எப்பக்கத்திலிருந்து தாக்கப்பட்டாலும்' தொடர்ந்து ஒரு கற்பாறையில் நிலைநிற்பது போலவே இருக்கும். சுய சித்தம் அல்லது சொந்த விருப்பத்திற்கு இடம் இல்லை என்ற நிலைக்கு வந்தவன்,* **தேவன் கட்டளையிடுகின்ற** *யாதொன்றிற்கும் கீழ்ப்படிவான்! அது, உயர்வோ அல்லது தாழ்வோ, பெரிதோ அல்லது சிறிதோ, சுவையானதோ அல்லது கசப்பானதோ, கனத்திற்குரியதோ அல்லது கனவீனத்திற்குரியதோ, ஜீவனாகிலும் அல்லது யாதொரு கேடான உலகத்திற்குரியதாகிலும், அவனுடைய ஆத்துமாவில் தங்கியிருக்கும் சமாதானத்தை அசைத்து விட முடியாது! ஜீவ காலமெல்லாம் நம்மோடு உறவாடி வந்த 'நம் சொந்த ஆத்துமா' எளிதில் வஞ்சனைக்கு உட்பட்டுவிட முடியும். நாம் பெற்ற சமாதானத்திற்குள் 'நம் சுய நல விருப்பம்' ஒரு கிருமியைப் போல் ஊடுருவிச் சென்றிட முடியும் என்பதை உணர்ந்து, நம் ஆத்துமாவை* **பரிசுத்த ஆவியின் பெலத்தைக் கொண்டு** *விழிப்புடன் காத்துக்கொள்ள வேண்டியது நம்முடைய பொறுப்பாகவே இருக்கிறது!*

*- மேடம் குயான்*

## ‘தேவன் மீது கொண்ட பசியை’ இழப்பது, ஆபத்து!

*எந்த விருப்பத்தை காட்டிலும், மேலான விருப்பம் தேவன்மீது வேண்டும்*

அவ்வப்போது என்னை வந்து சந்திக்கும் சில கிறிஸ்தவர்கள் ஒரேவிதமான மனவருத்தத்தை தெரிவித்திருக்கிறார்கள். அது என்னவென்றால் “நாங்கள் கிறிஸ்தவராய் மாறாதிருந்திருந்தால் நலமாய் இருந்திருக்கும்” என்ற வருத்தமே! அவ்வாறு நீங்கள் சொல்லுவதற்கு என்ன காரணம்? என்று கேட்டேன். அதற்கு அவர்கள் “நாங்கள் கிறிஸ்துவுக்காய் வாழ தீர்மானித்தது உண்மைதான். ஆனால் நாங்களோ இன்னமும் பாவம் செய்து கொண்டிருப்பதைக் கண்டு வருந்துகிறோம்” என்றனர். அவர்களுடைய தவறை நான் புரிந்துகொண்டேன். தாங்கள் கிறிஸ்துவுக்குள் வந்தவுடனே, அதுமுதற்கொண்டு அவர்கள் பாவமே செய்யமாட்டார்கள் என எண்ணிக்கொண்டார்கள்! “இப்போதோ, எந்தப் பாவம் வேண்டாம் என்று எண்ணினோமோ அதை நாங்கள் மீண்டும் செய்வதற்கு தூண்டப்படுவதைக் கண்டு வேதனையடைகிறோம்” என்பதே அவர்களின் கூற்றாயிருக்கிறது.

**அவர்கள் செய்த தவறு என்னவென்றால், கிறிஸ்துவுக்குள் நாம் வந்துவிட்டால், இனி ஒருபோதும் பாவம் செய்திட தூண்டப்படமாட்டோம், என அவர்கள் எண்ணியதேயாகும்.**

ஆனால், அது உண்மையல்ல! நாம் இந்த மாம்சத்திலிருக்கும் வரை, **பாவத்திற்கு எதிராக** தொடர்ச்சியாய் யுத்தத்தில் ஈடுபட வேண்டும். தேவன் விரும்புவதெல்லாம் ‘தொடர்ந்து’ நாம் பாவம் செய்யக்கூடாது என்பதுதான். அதே சமயத்தில், நம் ஜீவியத்தில் பாவம் இருப்பதைக் கண்டும், அதை காணாதது போல் இருப்பதுதான் தவறு! அவ்வித ‘ஏனோ - தானோ’ என்ற நிலைக்கு தள்ளப்பட்டவர்கள் உண்மை கிறிஸ்தவர்கள் அல்ல! நாம் செய்ய வேண்டியதெல்லாம் “தேவ நீதியான பரிசுத்தத்தின் மீது எப்போதும் பசிதாகம் கொண்டவர்களாயிருக்க வேண்டும். தேவ நீதியையும் பரிசுத்தத்தையும் சுதந்தரிக்க கொண்டிருக்கும் தாகம், இடைவிடாது நம்மில் இருக்கும்போது, நமது ஜீவியம் கிறிஸ்துவைப்போல நாளுக்கு நாள் வளர்ச்சி அடையும். இவ்வித வளர்ச்சிக்கு **தேவனுடைய உதவி இல்லாமல், அல்லது அவரது கிருபை இல்லாமல்** (ரோமர் 6:14) நாமாக வளர்ச்சி அடைய முடியாது என்பதை திட்டமாய் அறிந்திருக்க வேண்டும்!

“நீதியுள்ள வாழ்க்கையை” இயற்கையான வரமாய் நாம் பெற்றுக்கொள்ள இயலாது. அது, “தேவனால் அருளப்படும்” ஜீவியமேயாகும். தெய்வ நீதி நமக்குள் தங்குவது “பரலோகம்

*பூலோகத்தில் வந்திறங்கியதுபோல் இருக்கும்".* இவ்வாறு தெய்வ நீதி மனுஷனுக்குள் பிரவேசிப்பதின் முதல் பகுதி நாம் நீதியாக்கப்படுவதிலும் (Justification) பரிசுத்தமாக்கப்படுவதிலும் (Sanctification) தோன்ற ஆரம்பிக்கிறது. அது, ஒரு உத்தம விசுவாசியின் இருதயத்தில் நாட்டப்படும் நிலைத்திருக்கும் அனுபவமாயிருக்கிறது. அந்த அனுபவத்தை தொடர்ந்தே, தேவன் தம்முடைய நற்குணங்களை அல்லது அவரது திவ்ய சுபாவத்தை நமக்கு பங்கிட்டு அருளுகிறார். 2பேதுரு 1-ம் அதிகாரம் கூறுகிறபடி "அவருடைய திவ்ய சுபாவத்தில் நாம் பங்குபெறுகிறோம்".

இவ்வளவு பெரிய மேன்மை நமக்கு தேவனுடைய ஈவாய் கொடுக்கப்பட்டிருந்தாலும் அதற்குரிய முக்கிய பங்காய் இருப்பதெல்லாம், **திவ்ய சுபாவத்தில் பசிதாகம் கொண்டவர்கள் மாத்திரமே பெற்றுக்கொள்ள முடியும்!** தேவனிடத்தில் உசிதமான மன்னா இருந்தபோதிலும் அதை அவர், ஒருவருக்கும் வற்புறுத்தி கொடுக்கமாட்டார். இவ்வுலகில் உள்ள எதைக்காட்டிலும் மேலான விருப்பமாய் திவ்ய சுபாவத்தை பெறுவதற்கு நாம் கொண்டிருக்க வேண்டும்!

> **தேவன் மீது கொண்ட இந்த தாகம், வேறு எந்த விருப்பங்களைக் காட்டிலும் மேலானதாய் இருக்க வேண்டும். இவ்வித விருப்பம் கொண்டவர்கள் மாத்திரமே அவரைக் குறித்த பசியாலும், வறட்சியின் தாகத்தாலும், அவரையும் அவருடைய நீதியையும் அல்லது அவருடைய திவ்ய சுபாவத்தையும் தேடுவார்கள்!**

ஆகிலும், இதுபோன்ற உன்னத நிலைக்கு வந்தவர்களுக்கு ஏற்படும் அபாயம் என்னவென்றால், அவர்களைச் சூழ்ந்துள்ள எத்தனையோ காரியங்கள் "அவர்களின் நீதிக்குரிய பசியை கெடுத்துவிட முடியும்". அவ்வளவாய் "பாவ இன்பங்கள்" தேவனுக்குரிய காரியங்களின் மேல் கொண்ட 'பசியை' அழித்துவிட அவனைச்சூழ நெருங்கி நிற்கின்றன. உதாரணமாய், பவுலைப்போலவே 'ஆர்வமுள்ள' உடன் ஊழியன் அவருக்கு இருந்தார். அவர் பெயர் *தேமா.* ஆனால், ஒரு கால கட்டத்தில் **இந்த பிரபஞ்சத்தின் மேல் ஆசை வைத்து, அந்த ஆசை தேவன் மீது கொண்டிருந்த தாகத்தைவிட மேலானதாயிருந்தபடியால்,** பவுலை விட்டுப் பிரிந்தார். அவரைக்குறித்து பவுல் எழுதும்போது "தேமா இப்பிரபஞ்சத்தின் மேல் ஆசை வைத்து, என்னை விட்டு பிரிந்தான்" என்றே குறிப்பிட்டார் (2தீமோ.4:10).

இன்று நம்மிடத்திலுள்ள அநேகரிடமிருந்து, ஆவிக்குரிய காரியங்களிலிருந்த நம் பசியை, இப்பிரபஞ்சத்தின் பாவ இன்பங்கள்

*உறிஞ்சிக் கொண்டன. லோக - மோக சிந்தையால், பிசாசானவன், ஏராளமான லௌகீக இன்பங்களை குவித்து வைத்திருக்கிறான். அதில் தடுமாறி ஈர்க்கப்பட்டவர்கள் தேவன் மீதும், தேவனுக்குரியவைகளின் மீதுமுள்ள பசியை இழந்து போனார்கள்!*

*எங்கள் புளோரிடோ மாநிலத்தில், ஒரு மனிதன் இறைச்சி சந்தைக்கு முன்செல்ல, அவனுக்குப் பின்பாக ஒரு பெரிய வெள்ளைப் பன்றி அமைதியாக பின்தொடர்ந்து வந்தது! சற்று முன்பாக பன்றி பண்ணை வைத்திருந்தவர்கள் பன்றிகளை பின்னாலிருந்து அடித்து, இறைச்சி சந்தைக்கு ஓட்டிச் சென்றார்கள். இதைக் கண்ணுயற்ற ஒரு சகோதரன் "எப்படி உன்னுடைய பன்றி மாத்திரம் உனக்குப் பின்னாக வருகிறது?" என கேட்டான்.*

**அதற்கு அந்த இறைச்சி சந்தைக்காரன் "அது ஒன்றும் பெரிய காரியமல்ல" நான் முன்னே செல்லும்போது 'ஒரு பீன்ஸ் கொட்டையை' போடுகிறேன்! அதை தின்று கொண்டே பன்றி என்னை பின்தொடர்ந்து வருகிறது என விளக்கினார்.**

*நம் ஜீவிய காலத்திலும், சத்துருவானவன் 'சிற்றின்பங்களை' போட்டு வைக்கிறான். அதை பின்தொடரும் திரளான மானிடர்கள் 'நித்திய அழிவை நோக்கி' வேகமாய் அவனுக்குப் பின் சென்று கொண்டிருக்கிறார்கள்!*

*சிற்றின்ப மோகத்திற்குரிய பாவங்கள், அருவருப்பான வெளிப்படையாகவோ அல்லது நாகரீகத்திற்குரிய மறைவாகவோ நம்மிடத்தில் வரக்கூடும். நமது தேவைக்காக உள்ள உலக காரியங்களில் தவறு ஏதும் இல்லை! ஆனால் அவைகளிலிருந்து முளைத்தெழும்பும் விழுது போன்ற கைகள் அவர்களைப் பிடித்து இழுத்து, அவர்களின் ஆவிக்குரிய பசியையும், நீதியின் மீது கொண்ட தாகத்தையும் வளைத்துப் பிடித்து உறிஞ்சிக் கொள்ள முடியும்! எப்படியெனில் 'தீண்டி' (உணவு) என்பதற்கும் 'பெருந்தீண்டி' என்பதற்கும் உள்ள வித்தியாசமாகும். ஒன்று நமது தேவை! மற்றொன்று நமது இச்சை!*

*அது, நாகரீகமான உங்கள் அலுவலகப் பணியாகவோ அல்லது உங்கள் மேல் படிப்பாகவோ அல்லது இதுபோன்ற நூற்றுக்கணக்கான விஷயங்கள், தேவன் மீதும் அவருடைய நீதியின் மீதும் நாம் கொண்ட பசியை குறைத்து, அழித்துவிட முடியும். ஆகவே, நீங்கள் தேவன் மீது கொண்டிக்கும் பசியை இழக்காதிருந்திட மிகுந்த ஜாக்கிரதை கொண்டிருங்கள்!*

*- பண்டிதர் பில்லிகிரஹாம் USA*

## ‘ஆதிநிலைக்குத் திரும்பிட’ அழைக்கும் ஆண்டவர்!

*தேவனுடைய ‘பூரண சித்தம்’ அறிந்து வாழுங்கள்*

எரேமியா தீர்க்கதரிசி மூலமாக கர்த்தர் உரைத்த கட்டளை என்னவெனில் “வழிகளிலே நின்று, (ஆதியிலிருந்த) பூர்வ பாதைகள் எவை என்று கேட்டு, விசாரித்து, நல்ல வழி எங்கே? என்று பார்த்து” அதிலே நடவுங்கள்! (எரேமியா 6:16). ஆனால், இந்த கட்டளையை ஜனங்கள் புறக்கணித்து, அதே வசனத்தில் *“அவர்களோ நாங்கள் அதிலே நடக்க மாட்டோம் என்கிறார்கள்”* என காண்பது மிகுந்த துயரம்! அன்று எரேமியா தீர்க்கதரிசி காலத்தில் நடைபெற்ற இந்த சோகமே ‘நம்முடைய நாட்களிலும்’ சம்பவித்து வருகிறது.

தேவனோ “பூர்வ பாதைகளில்” மகிழ்ச்சியாயிருக்கிறார். உதாரணமாய், அன்று மார்க்கத் தலைவர்களாயிருந்த வேதபாரகர்கள் **‘விவாகரத்தைக் குறித்து’**(Divorce) இயேசுவிடம் வந்து விவாதித்தார்கள். இயேசு உடனடியாக, திருமணத்தைக் குறித்த தேவனுடைய ஆதி நோக்கத்தை கோடிட்டு காண்பித்தார்! “அவர்களுக்கு அவர் பிரதியுத்தரமாக: ஆதியிலே மனுஷனை உண்டாக்கினவர் அவர்களை ஆணும் பெண்ணுமாக உண்டாக்கினார் என்பதையும்..... அவர்கள் இருவராயிராமல் ஒரே மாம்சமாய் இருக்கிறார்கள் எனவும், **ஆகையால், தேவன் இணைத்ததை மனுஷன் பிரிக்காதிருக்கக்கடவன்**” (மத் 19:4-6) என்ற வசனத்தையே கோடிட்டு காண்பித்தார். ஆனால் அவர்களோ, தொடர்ந்து வலியுறுத்தி “அப்படியானால், தள்ளுதற் சீட்டைக் கொடுத்து, அவளை தள்ளிவிடலாம் என்று மோசே ஏன் கட்டளையிட்டார்” (வச.7) என கேட்டார்கள். இதற்கு அவர் கொடுத்த பதிலும் “ஆதி - பூர்வ வழியை” கோடிட்டே இயேசு பேசினார்: “அதற்கு அவர், உங்கள் மனைவிகளை தள்ளிவிடலாம் என்று, உங்கள் இருதய கடினத்தினிமித்தம் மோசே உங்களுக்கு இடம் கொடுத்தார்! **(பூர்வ) ஆதி முதலாய் அப்படியிருக்கவில்லை**” (வச.8) என கூறினார். இங்குதான் தேவனுடைய “பூரண சித்தத்திற்கும்” “(அவரால்) அனுமதிக்கப்பட்ட சித்தத்திற்கும்” இடையில் காணும் வித்தியாசம் இருக்கிறது.

‘விவாகரத்து, தேவனால் அனுமதிக்கப்பட்ட’ சித்தமேயாகும். அதுவும் ஜனங்களுடைய இருதய கடினதினிமித்தமே அவ்வாறு அனுமதித்தார். **ஆனால் ‘கணவனும் மனைவியும்’ பிரிந்திருக்க கூடாது என்பதே தேவனுடைய பூரண சித்தமாகும்.**

ஆகவே, உங்களில் ஒருவராகிலும் ‘தேவனால் அனுமதிக்கப்பட்ட சித்தத்தில்’ தேங்கி விடாதிருக்க ஜாக்கிரதை கொண்டிருங்கள்! எப்போதும், **ஆண்டவருடைய பூரண சித்தத்தை** நிறைவேற்றுவதற்கே நாடுங்கள்.

*மற்றொரு உதாரணத்தையும் நீங்கள் காண்பது நல்லது. அது, பிள்ளைகள் பெற்றோர்களுக்குச் செய்திட வேண்டிய கடமையை குறித்ததாகும். வேதப்பூர்வமாய், ஒரு மகன் தன்னுடைய பெற்றோர் களை 'எல்லாவிதத்திலும்' பொருளாதார ரீதியில் ஆதரிக்க வேண்டும் என்பதேயாகும். அப்படியிருக்க, இயேசுவின் நாட்களில் இருந்த மார்க்கத் தலைவர்கள், தேவனுடைய பூரண சித்தத்திற்குப் புறம்பாக வேறொரு வழிமுறையை கொண்டு வந்தார்கள். அவர்கள் கூறியது என்னவென்றால் "ஒரு மகன், தன் தகப்பனையாவது தாயையாவது நோக்கி, 'ஆலயத்தின் மீது ஆணையாக' யாதொரு உதவியான ஆதரவை என் மூலமாக பெற்றால்" அது, தேவனுக்குத் தரப்படும்* **'கொர்பான்'** *காணிக்கையாக எண்ணப்படும் (மாற்கு 7:11) என, அன்றைய வேதபாரகர்கள் போதித்திருந்தார்கள்.*

**அதுஏனென்றால் "இனி அந்த மகன் தன் தகப்பனுக்காவது தன் தாய்க்காவது யாதொரு உதவியும் செய்யவொட்டாமல்"அந்த மகனின் ஆதரவை ஆலய காணிக்கையாக மாற்றினார்கள்! (வச.12,13). இவ்வாறு அந்தமகன்பெற்றோரைஆதரிக்கவைத்திருந்தபணத்தைஆசாரியர்களுக்கு கொடுப்பதற்கே வழிவகுத்தார்கள்! இது, வஞ்சகமல்லவா?**

*இவ்வித அவபக்தியான நடைமுறையைக் கொண்டு வந்த அவர்கள் மீது இயேசு மிகுந்த வருத்தமடைந்தார்! ஆனால், தேவனுடைய 'பூர்வீக' கட்டளையை இயேசு குறிப்பிட்டு உன் தகப்பனையும் உன் தாயையும் கனம் பண்ணுவாயாக என்ற வேத வாக்கியத்தை மீண்டுமாய் உறுதிப்படுத்திக் கூறினார். இவ்வாறு தேவ வசனத்தை அவமாக்கிவிட்டு, தங்கள் பாரம்பரியங்களை முதன்மைப்படுத்திய வேதபாரகர்களை இயேசு வன்மையாக கடிந்து கொண்டார்! (வச.13).*

**ஆகவே "தேவனுடைய பூர்வீக நோக்கங்களை" தங்கள் வசதிப்படி மாற்றிக் கொள்ளத் துணியும் வஞ்சகர்களுக்கு எச்சரிக்கையாயிருக்கும் படியே இயேசு போதித்தார்.**

*வேதாகமத்திலுள்ள யோபுவின் புத்தகம், மிகவும் பழமைவாய்ந்த ஆரம்ப காலத்தில் எழுதப்பட்ட பூர்வீக புத்தகமாகும். யோபு 8:8-10 வசனங்களில் "நீர் முந்தின தலைமுறையாரிடத்தில் விசாரித்து, அவர்கள் முன்னோர்களின் செய்தியை ஆராய்ந்துப்பாரும்.* **நாம் நேற்று உண்டானவர்கள். ஒன்றும் அறியோம்.** *பூமியின்மேல் நம்முடைய நாட்கள் நிழலைப்போல் இருக்கிறது. அவர்கள் உமக்கு உபதேசித்து... தங்கள் இருதயத்தில் இருக்கும் நியாயங்களை வெளிப்படுத்துவார்கள் அல்லவோ" என்பதே ஆண்டவரின் தூய்மையான அழைப்பு!*

*ஓர் மகிமையான முடிவுக்குரிய இரகசியத்தையே இந்த*

வசனங்கள் நமக்கு வெளிப்படுத்துகின்றன. உண்மைதான், நம்முடைய அனுபவங்கள் குறைவுள்ளது! நமக்கு வெளிப்படுத்தப்பட்டவைகளும் கொஞ்சம்தான்! ஆகவே **வேதாகமத்தின் பூர்வீக போதனைகளுக்கு** நாம் திரும்பி வந்து, தாழ்மையுடன் நம் முற்பிதாக்களிடமிருந்து கற்றுக்கொள்வோமாக!

*- R.ஸ்டான்லி BYM*

---

## இன்று 'அவரது சபையே' தேவன் தங்கும் வாசஸ்தலம்!

*கிறிஸ்தவன் தனியாய் இருப்பது நல்லதல்ல*

இந்த பூமியில் "தேவன் தங்குவதற்கு ஓர் வாசஸ்தலம்" உண்டு! இந்த புனிதமான விருப்பம், பழைய ஏற்பாட்டின் "ஆசரிப்பு கூடாரத்திலிருந்து" ஆரம்பித்து, இன்று வரை தொடருகிறது. அன்று சாலமோன் எழுப்பிய ஓர் அழகு நிறைந்த பிரமாண்ட ஆலய வீட்டில் தேவன் வாசம் செய்தார். இன்று, தேவன் பூமியில் வாசம் செய்யும் ஸ்தலமே "சபை" என்பதாகும். அந்த சபை, நாம் தான்! நாம் அநேகராயிருந்தாலும் தேவனுடைய ஒரே வாசஸ்தலமாய் கூடி வருகிறோம்.

**நாம் ஒவ்வொருவரும் தனி நபராய் இருந்தாலும், இனி தனி நபர் இல்லை! அநேக தேவனுடைய பிள்ளைகளை பரிசுத்த ஆவியானவர் இணைத்து, நம்மை தேவனுடைய வீடாக மாற்றுகிறார்.**

இதை உறுதிப்படுத்தும் வசனமே "நீங்களும் ஜீவனுள்ள கற்களைப்போல, ஆவிக்குரிய மாளிகையாக கட்டப்பட்டு வருகிறீர்கள்" (1பேதுரு 2:5).

ஓர் ஆவிக்குரிய, தேவனுடைய வீடு எவ்வாறு கட்டப்படுகிறது? **அது ஜீவனுள்ள கல்லை வைத்தே அல்லாமல், மரித்த கல்லை வைத்து அல்ல!** பேதுரு ஓர் ஜீவனுள்ள கல்லாக ஆண்டவரால் அறியப்பட்டிருந்தார். ஆகவே ஒவ்வொரு ஜீவனுள்ள கற்களையும் இணைத்து, தேவன் தனக்கு தங்கும் வாசஸ்தலத்தை கட்டுகிறார். அப்படியிருக்க, ஒரு விசுவாசி மாத்திரம் தனித்து தேவனுடைய வீடாய் கருதப்பட முடியாது. ஒரு கல்லின் மேல் மற்றொரு கல் இணைத்து கட்டப்படுவதே சபையாகும்! ஆகவே, இப்போது தேவனுடைய வீடு கட்டப்பட வேண்டுமென்றால் எல்லா கற்களும் இணைந்து கட்டப்படுவது அவசியமாகும். நீங்கள் இரட்சிக்கப்பட்டு, ஆண்டவராகிய இயேசுவை விசுவாசித்து வாழ்ந்தால், நீங்களும் ஓர் ஜீவனுள்ள கல்! இந்த பாக்கிய நிலையை அடைந்த பிறகு 'உங்களை தனியாக வைத்துக்கொள்ளும்' அபாயத்திற்கு விலகி இருங்கள். நீங்கள் மற்ற கற்களோடு இணைத்து கட்டப்பட்டால் கர்த்தரின் வீடாய் அல்லது கிறிஸ்துவின் சபையாய் மாறும் அற்புதம் நிகழும்! தனியாய் நிற்கும் ஓர் கல் 'இடறல் உண்டாக்கும் கல்லாய்' மாறிவிடும் என அறிந்து, விழிப்புடன் இருங்கள்!

*- வாட்ச்மென் நீ*

## அவர் ‘எல்லாவற்றையும்’ நன்றாய் செய்தார்!

*தெய்வ உறவு சகலத்தையும் மாற்றியமைக்கும்*

*இயேசு புறப்பட்டு, கலிலேயா வந்தார்! அங்குதான் கொன்னை வாயும் (திக்கு வாயும்), செவிடனுமான ஒருவன் அவரிடம் கொண்டு வரப்பட்டான் (மாற்கு 7:32). இயேசுவை நோக்கி "இவனது திக்குவாயையும், செவிட்டு காதையும் சுகமாக்கும்" என அவர்கள் வேண்டிக்கொள்ளவில்லை. அதற்குப் பதிலாக* **"உமது கையை அவன்மீது வைக்கும்படியே"** *வேண்டிக்கொண்டார்கள். 'ஜெபமே' நாம் தேவனை சந்திக்கும் நேரம். ஆனால், அனேகர் தேவனை சந்தித்து அவரோடு சினேக உறவை வளர்க்காமல் "அவரிடமிருந்து எதைப் பெற்றுக்கொள்ளலாம்?" என்ற ஆர்வமே அவர்களிடம் மேலோங்கி உள்ளது!* **சுகம் கேட்டார்கள். ஆனால், சுகம் தருபவரின் தொடுதலை கேட்பதில்லை!** *நம் ஆண்டவரோ அன்புள்ளவர், இரக்கமுள்ளவர். எனவே நல்லோருக்கும், தீயோருக்கும் "பொதுவான உலக நன்மைகளைக்" கொடுத்து விடுகிறார். அதில் திருப்தி கொண்டே, இவ்வித தங்கள் ஜெப ஜீவியத்தை வலுப்படுத்திக் கொள்கிறார்கள். ஆனால் "பரலோகப் பிதாவின் உறவில் அவரது புத்திரனாகும்" நெருங்கிய பாக்கியத்தைப் பெறுவதில்லை! (மத்.6:45).*

*இங்கோ "உமது கையை அவன்மீது வைத்திடும்" என கேட்டுக் கொண்ட விண்ணப்பத்தால், இயேசு கவரப்பட்டு அவனை 'தனியே அழைத்துச் சென்று' தமது விரல்களால் அவன் காதுகளையும் நாவு களையும் தொட்டார்! அதோடு, அவனது நாவு கட்டவிழ்ந்து, அவன் காதுகள் திறக்கப்பட்டு, அவன் செவ்வையாகப் பேசினான்! கர்த்தரைத் தேடிவந்த அந்த மக்கள் "அவர் எல்லாவற்றையும் நன்றாய் செய்தார்!" என, சொல்லிமுடியா ஆச்சரியம்* (Astonished beyond measure) *அடைந்தார்கள்! (மாற்கு 7:37).*

> **என்னுடைய வீடு "ஜெப வீடு" என்றே இயேசு அழைத்தார்! (மத்.21:13). கர்த்தரைத் தேடி, அவர் உறவை நாடும் ஜனங்களைக் கொண்டவர்களாகவே ஆண்டவரின் சபை இருக்க வேண்டும்!**

*அதுபோன்ற தம் மக்களை நாடி கர்த்தர் அவர்களிடம் வருவார்! அவர்கள் நாடிய இனிய தெய்வீக உறவைத் தருவார்..... அதோடு, நாம் அறிந்த அல்லது அறியாத குறைவுகளையும் தொட்டு* **"எல்லாவற்றையும் நன்றாய் செய்வார்".** *ஆ, இந்த பாக்கியம் இந்தப் புதிய ஆண்டில் நம் எல்லோருக்கும் கிடைத்திட, தேவன் அருள்புரிவாராக! ஆமென்.*

*- T.ரத்தினகுமார்*

## பக்தியான தமிழ் கிறிஸ்தவ பாகவதர் !

# துரைராஜ் வேதநாயகம் சாஸ்திரியார்!



பாகவதர் துரைராஜ் வேதநாயகம் சாஸ்திரியார் 1936-ம் ஆண்டு சங்கை ஜெயசீலன் பாகவதர் வேதநாயகம் சாஸ்திரியார், திருமதி சுந்தரி அம்மாள் அவர்களுக்குப் பிறந்தார். துரைராஜ் வேதநாயகம் சாஸ்திரியார், "சாஸ்திரியார் வழிமுறையில்" வந்த 9-வது சாஸ்திரியார் ஆவார். தஞ்சை, சாஸ்திரியார் குடும்பத்தின் மிகப்பெரிய முக்கியத்துவம் என்னவென்றால், தேவசித்தம் அறிந்து, அவரது உன்னத அழைப்பை பெற்ற பிறகே சாஸ்திரியார் பாகவதர் ஊழியங்களை பொறுப்பேற்று கர்த்தருக்கு உண்மையான ஊழியம் செய்தார்கள். துரைராஜ் 25 வயதான போது, அவருடைய தந்தை விருப்பப்படி வடக்கன்குளம் TELC லூத்தரன் சர்ச் போதகரின் மகள் சுசிலா அவர்களை திருமணம் செய்தார். சுசிலா அவர்கள் ஆசிரியை பயிற்சி பெற்ற மிகுந்த பக்தியுள்ள மாதரசி! அவர்களுக்குப் பிறந்த 4- பிள்ளைகளில் கடைசி மகன் பெயர் கிளமெண்ட் இம்மானுவேல். இக்காலங்களில் தன் தந்தை வேதநாயகம் சாஸ்திரியார் பாடல்களை பக்தியுடன் பாடி வருகிறார்.

தன் தந்தை ஜெயசீலன் வேதநாயகம் சாஸ்திரியாரிடம், அவர் செய்த பாகவதர் ஊழியத்தினிமித்தம், தந்தையின் மீது அதிக மதிப்பும் மரியாதையும் வைத்திருந்தார். தன் தந்தை சென்ற இடங்களுக்கெல்லாம் உறுதுணையாய் நின்று உதவி ஊழியம் செய்தார். அவரது தகப்பனார், கடைசி காலங்களில் குருடராகி விட்டப்படியால், தன் தந்தைக்குச் செய்ய வேண்டிய எல்லா கடமைகளையும் எந்த முறுமுறுப்பும் இல்லாமல் அன்போடும் மரியாதையோடும் செய்தார். மகனின் உத்தமத்தைக் கண்ட ஜெயசீலன் சாஸ்திரியார் "மகனே, கர்த்தர் என்னை பயன்படுத்தியதை விட உன்னை அதிகமாய் பயன்படுத்துவார். நான் செல்ல முடியாத இடங்களுக்கெல்லாம் உன்னை அவர் எடுத்துச் செல்வார். நான் கர்த்தரால் ஆசீர்வதிக்கப்பட்டதை விட கர்த்தர் உன்னை ஆவிக்குரிய பொருளாதார ஆசீர்வாதத்தினால் அபரிதமாய் ஆசீர்வதிப்பார்" என மனதார வாழ்த்தினார். தன் தகப்பனார் வாழ்த்திய ஆசீர்வாதங்கள் தன் வாழ்க்கையில், நிஜமாய் மாறியது என வேதநாயக சாஸ்திரியார் அடிக்கடி கூறுவார்கள். தன் பிரசங்கங்களில் "வாலிபர்களே, உங்கள் ஜீவியத்தின் மற்றும் ஊழியத்தின் மேன்மைக்கு, உங்கள் பெற்றோரின் ஆசீர்வாதம் மிக மிக முக்கியம்" என அடிக்கடி கூறுவார். 45 வருட தொடர்ச்சியான ஊழியங்களில் தேவன் அவரை ஐரோப்பா, அமெரிக்கா உட்பட பல நாடுகளுக்கு எடுத்துச் சென்று பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்களை ஆசீர்வதித்தார். அவருடைய 'கதா – காலட்சேபம்' மிகுந்த பக்தியும் தெய்வ அன்பும் நிறைந்ததாயிருக்கும். அவர் இயற்றிய 'ஆமென் அல்லேலூயா' பாடல் 'நன்மை பெற்று அனுதினம் வாழ்க' பாடல், நிகழ்ச்சியின் முடிவில் தவறாமல் அவர் பாடும் 'சோபனமே சோபனமே' போன்ற சுமார் 100 பாடல்கள் தமிழ் கீர்த்தனை புத்தகத்தில் உள்ளன! தன்னை ஆதரித்து உருவாக்கியது தன் இரட்சகர் மாத்திரம் அல்ல, என் தந்தையே எனக்கு மதிப்பிற்குரிய உபாத்தியாராயும், என் குருவாகவும் இருந்தார்! என வாழ்த்தும் துரைராஜ் வேதநாயகம் சாஸ்திரியார் அவர்களுக்கு இப்போது 87 வயது. அவரை பின்தொடர்ந்து பாகவதர் சாஸ்திரியார்கள் தொடர்ந்து எழும்புவார்களாக!

*– நிரூபித்து வாழ்ந்த கிறிஸ்துவின் தாசர்கள்*

## ஓ வாலிபனே, சிருஷ்டி கர்த்தருக்கே முதலிடம் கொடு!

“நீ ஏன் நேற்றைய தினம் ஞாயிற்றுக்கிழமை வேலைக்கு வரவில்லை?” என கேட்டார், முதலாளி.

“பரிசுத்த ஓய்வுநாளில் நான் வேலை செய்யக்கூடாது என்பது என் கர்த்தரின் சித்தமாகும்” என்றான் அந்த வாலிபன் ஸ்டிவான்ஸோ.

“அப்படியா, இந்தச் சுரங்கத்தில் இனிமேல் நீ ஒருக்காலும் வேலை செய்யக் கூடாது என்பதும் கர்த்தரின் சித்தமே. நீ வீட்டுக்குப் போகலாம்” என்று நகையாடி அனுப்பிவிட்டார், சுரங்க முதலாளி.

முதலாளியின் கோப வார்த்தைகளால் ஸ்டீவான்ஸின் விசுவாசம் சற்றும் தளர்ந்து விடவில்லை. “வானாதி வானங்களுக்கும் தேவன், கன்மலைகளின் தேவன் என் நல்ல நண்பனாக இருக்கின்றார். என் வேலையே போனாலும், அதைப்பற்றி நான் கவலைப்படப் போவதில்லை” என்று கூறிவிட்டு அமைதியாக சென்று விட்டான் ஸ்டிவான்ஸோ என்ற பெயர் கொண்ட அந்த வாலிபன்!

சில மாதங்களுக்குப் பின்னர், மேற்குறிப்பிடப்பட்ட சுரங்கத்தின் முதலாளி, சுகவீனப்பட்டபோது, தன்னுடைய ஸ்தானத்தில் உண்மையாய் பணியாற்ற யாரால் முடியும்? என யோசித்துப் பார்த்தார். அவர் மனதில் “தெய்வத்தை நம்பி வாழ்ந்த” ஸ்டிவான்ஸோ வாலிபனே தோன்றி மறைந்தான்! உடனே ஸ்டிவான்ஸோவை அழைத்து வரக்கூறி, தன் சுரங்கத்தின் சாவியை அவனிடம் ஒப்படைத்து “இனி நீ தான் இந்த சுரங்கத்தை நிர்வகிக்கும் மேனேஜர். ஞாயிற்றுக்கிழமை, நம் சுரங்கத்திற்கு விடுமுறை!” என கூறியதைக் கேட்டு, ஸ்டிவான்ஸோ கண்ணீருடன் தன் கர்த்தரின் உத்தமத்தை துதித்தான்.

ஓ வாலிபனே, தேவனை உன் வாழ்வின் முதலிடம் வைத்துப் பழகு! தன்னை அவ்வாறு கனம் செய்கிறவர்களைக் கர்த்தரும் கனம் செய்வார்! தனக்கு ‘முதலிடம் கொடுத்து’ கனம் செய்தவனை, தெய்வம் கனப்படுத்தாமல் இருந்ததேயில்லை!

- சுவிசேஷ மலர்

பணம் அனுப்ப QR பயன்படுத்தவும்

பரலோக பொக்கிஷங்கள்

Published and Owned by:
Madurai Christian Fellowship, Regd Society,
*Editor* T.Rathnakumar, Madurai.
Printed by SFA Print (P) Ltd., Sivakasi.

maduraichristianfellowship@indianbk